26

BAKTHA BALA SAMAJAM SERIES No. 10.

OFFICE OF ... REGISTERED 4 JAN 1912 MADRAS.

ஓம்

சக்ரவர்த்தியார்

# மகுடாபிஷேக வாழ்த்து

இது

கோவல் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்து
சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்
இயற்ற

பக்த பால ஸமாஜம்

ம. ரா. குமாரசாமியால்

திருக்கோவலூர்
புஷ்பாலயாம்பா விலாஸ அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1911.

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்."

மோசிகீரனார்.

உ

# மகுடாபிஷேக வாழ்த்து.

## அகவல்.

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க மன்னர் மன்னன் வாழ்க
வாழ்க ஜியார்ஜெனும் மன்னர் சிகாமணி
வாழ்க மேரியென் மங்கையும் வாழ்க
நமர்பிற ரென்ன நாடாப் பெரும
மன்ன ருறுபொருண் மானமென் றுறுவோய்
வெயிலென முனியாச் சயிலவண் புயத்தாய்
பனியென மடியாப் பரந்திடு சீர்த்திய
சிந்தைகொள் வன்மையிற் சிறந்திடு வீர
அறத்திறன் குன்றா வாரியர் செல்வ
தனைமுழு தாளுந் தாணிபர் தலைவ
ஆட்டுவோ ருடிக் காட்டுமா றென்ன
ஆலயஞ்சென்று வழிபடல் கூருவை
முதலாக் கொண்டு முடிசூ டிக்கொளல்
இன்னன பிறவு மியற்றிடு மேந்தால்
தூங்காமை முதல நீங்கா மன்ன
ஆறு முடைய வீறியர் குரிசில்
நெறிய றிந்துகொ ணேரியர் தோன்றல்
தன்சொன் மாறா தின்சொ லுடையாய்
நின்னைச் சக்கர வர்த்தியாப் பெற்ற
இங்கில மன்றோ நன்னில மென்பார்
நின்னை யரசாப் பெற்ற வெங்களின்
மன்னிடு மதிர்ஷ்ட மக்கள் யாரே
ஒவ்வோ ருடற்கு மொவ்வோ ருயிரொன்
றறைந்திடு நூல்க ளதற்கு மாறு

மூன்று பத்தோ டொன்றெனுங் கோடி
யுடற்கெலா மோருயி ருவனென் றுரைக்க
நின்றிடு நின்சீர் நிகழ்த்தற் பாற்றே
நெல்லுயி ரென்பார் நீரில வதமர்
நீருயி ரென்பார் நிகழ்மத் திமரே
அரச னுயிரென் றறைந்திடு பவரே
உத்தம ராவ ருலகறிந் ததுவே
புறப்பொரு ளிருந்தென் பொருவரு முறுப்பாங்
கண்ணிருந் தென்பயன் கண்ணுறச் செய்யும்
உயிரொன் றிலையே லுறுபய னுண்டோ
நாணில மிருந்தென் யாங்க ளிருந்தென்
நின்னிருப் பதனான் மன்னுவ தின்பே
ஆதலின் பலகா லகரூல காண்டு
மன்னுக வரசே மன்னுக வரசே
காட்சிக் கெளியன் காவல ரேறென்
றறைபழஞ் சொல்லைப் புதுக்கிய திறல
தக்கவர் போற்றுஞ் சக்கர வர்த்தியென்
றறைபெய ராதவ னத்தமி யாத
அவனியா ணினக்கே யன்வர்த்த மாகும்
முன்னும் பின்னு முன்னுமித் தருணமுங்
கொண்டவர்க் கப்பெயர் கூறுப சாரம்
ஆங்கில வரசரு ளீங்கர சாண்டவர்
மூவர் தம்முளு முதன்மை கொண்ட
அரசியா ரிந்த வகன்ற விந்த்யாவை
செவியிற் கண்ட செவ்விய ரன்றே

இரண்டா வதான எட்வர் டரசரும்
கண்ணிற் காணினுங் கண்ட காலம்
இளவர சாகி யிருந்தகா லமதாம்
சீரியல் கொண்ட தேரிய நீயோ
செவியிற் கண்டனை கண்ணிற் கண்டனை
முன்பின் னெனுமிரு நன்னர் காலமும், அதனால்,
நின்போன் மன்னர் நீணிலத் தியாரே
ஆன்ற மக்க ளடைபொரு ணான்கனுள்
இவ்வுல குறுவன வெவ்வமின் மூன்றே
அவற்று ணடுவ னமைந்த பொருளே
இன்றே லிரண்டு மில்லை யன்றோ
அம்மாண் பொருளு மருங்குல வரசன்
இன்றே லில்லை யிதுபுதி தன்றே
தனைப்போற் பிறரை நினைத்தருள் செய்யும்
நின்னா லன்றோ யென்னருஞ் சுகிப்பர்
நீதானின்றே லாய்பொரு ளெங்கே
மக்களெங்கே மனைவியெங்கே
மனைதானெங்கே வனைதா னெங்கே
தநய னெங்கெ விநய மெங்கே
நிலந்தா னெங்கே நீர்தா னெங்கே
குலந்தா னெங்கே வலந்தா னெங்கே
வழக்க மெங்கே யொழுக்க மெங்கே
உயிர்தா னெங்கே யுடலு மெங்கே
மதமு மெங்கே யிதமு மெங்கே
சாத்திர மெங்கே கோத்திர மெங்கே

மழைவள மெங்கே தழைபயி ரெங்கே
வேதநூ லெங்கே யாதர்கற் பெங்கே
நின்னைப் பற்றியே நிற்கு மனைத்தும்
ஆதலின் நீயு மார்ந்துபல் சுகமும்
வாழ்குக பன்னாள் வாழ்குக பன்னாள்
சூரிய னாச னீதிநூ லென்ன
உரைத்திடு கண்கண்மூன் றுலகிற் குள்ளன
நடுவ ணமர்ந்த நற்கண் கொண்டே
ஏனை யிரண்டு மிருப்பயன் றருவன
தரைகட லென்னத் தரணிபர் வழுத்தும்
இருவகைப் படையிலு மெதிர்ப்பவ ரில்லாய்
சேய்கட் கூட்டுந் தாய்போற் சுகங்கள்
எங்கட் கூட்டு மெழிலுறு வள்ளால்
சொற்பதி போன்ற பற்பல ருடனே
கூடியாளுங் குணக்கட லனையாய்
துலைநா வன்ன வலையா வாட்சிய
இந்திர நகரி லெங்கண் காண
முடிசூ டிக்கொளு முழுமுதற் பெரும
அறிவிலார்க் கறிவை யகற்று மாதிப
தரிசனந் தந்து வரிசைப் படுத்துங்
கருணையங் கடலே பரிணதர் வாழ்வே
நன்றியறிந்த நாங்களென் செய்வம்
கடவுளை வேண்டுவம் காவல் வேந்தே
வாழ்க வாழ்க வாழ்க பன்னாள்
வாழ்க சுகமா வாழ்க வாழ்கவே.

இச்சிறு புத்தகம் 1911௵ டிசம்பர்மீ 12உ திருக்கோவலூரில் நடைபெற்ற மகுடாபிஷேக மஹோத்ஸவ சமயத்தில் பக்த பால ஸமாஜத்தாரால் விநியோகிக்கப்பட்டது.